# வாழ்வியல் அம்சங்கள் அன்றும் - இன்றும்

## (கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

LIBRARY
0 9 OCT 2020
EUSL SRI LANKA

பெயர் : தம்பிராசா குமுதினி

பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/67

சுட்டெண் : CS 5217

இந்த ஆய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணிச் சிறப்புக் கற்கைநெறியின் இறுதிவருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC 814
Project Report
Library - EUSL

வரலாற்றுத்துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

வளமான தேசம் ஒன்றை உருவாக்குவதில் வாழ்வியல் அம்சங்கள் முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு மனிதன் பிறந்து பின் அவன் உயிர் இவ்வுலகை விட்டு பிரியும் வரையில் அவனுடன் பின்னிப்பிணைந்தவையாக வாழ்வியல் அம்சங்கள் காணப்படுகின்றன. ஒரு பிரதேசத்தின் கலாசாரம், பண்பாடு என்பவற்றுடன் பின்னிப்பிணைந்த வாழ்வியல் அம்சங்கள் அவர்களை தனித்து அடையாளப்படுத்தும் அம்சமாக உள்ளன. இவ்வாழ்வியல் அம்சங்களில் மனிதனோடு தொடர்புபட்ட பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், பண்பாட்டு மரபுகள் எனப் பல விடயங்களும் உள்ளடங்குகின்றன.

கிழக்கிழங்கை என்பது தனித்துவமான வரலாற்று அம்சங்களைக் கொண்டதாகும். கிழக்கிழங்கையின் ஒரு பகுதியான மட்டக்களப்பின் அங்கமாக உள்ள வாகரை மண் ஆதிகால, இடைக்கால வரலாற்றைக் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசமாகக் காணப்படுகிறது. வாகரையில் வாழும் மக்கள் பழங்காலந் தொட்டு பல சிறப்பு மிக்க வாழ்வியல் அம்சங்களை பின்பற்றி வந்துள்ளனர் எனினும் காலமாற்றத்திற்கு ஏற்ப இவர்களது வாழ்வியல் அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன அத்தோடு பல வழக்கொழிந்துவிட்டன. இன்னும் சில வழக்கொழியும் நிலையில் உள்ளன. அவ்வாறு வழக்கொழிந்த வாழ்வியல் அம்சங்களை கண்டறிந்து அவற்றை “வாழ்வியல் அம்சங்கள் அன்றும் - இன்றும்” என்ற தலைப்பில் ஆவணப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

இவ்வாய்வானது வாகரை மக்கள் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்த வாழ்வியல் சமூகப் பண்பாட்டு மரபுகளில் சாதியமைப்பு, சமய நடைமுறைகள், குடிமனைகள், உணவு, உடை, பாரம்பரிய மருத்துவ நடைமுறைகள், பாவனைப் பொருட்கள், நம்பிக்கைகள் போன்ற அம்சங்களும் சடங்குகளில் பிறப்புத் தொடங்கி இறப்பு வரையுள்ள வாழ்வியல் சடங்குகளும் அவை பற்றிய ஐதிகங்களும் மேலும் பொருளாதார நடவடிக்கைகள், போக்குவரத்து முறைகள் என்பன பற்றிய ஓர் பதிவாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

வாகரை மக்கள் யுத்தத்தின் மூலமான இடப்பெயர்வுகள், ஆழிப்பேரலை மூலமான இடப்பெயர்வுகளாலும் தமது பாரம்பரிய வாழ்வியலைக் கைவிட்ட போக்கினையும் காண முடிகிறது. அத்துடன் இப்பகுதி மக்களின் பாரம்பரிய வாழ்வியல் அம்சங்கள் பற்றிய அறிவு தற்கால சந்ததிகளிடம் காணப்படவில்லை அவை குறைவடைந்து வருகின்றன. அவை பற்றிய அறிவு காணப்படும் முதியவர்களின் மூப்பு, இறப்புக் காரணமாக அவை அழிவடையும் நிலையினை எதிர்நோக்கியுள்ளது. எனவே இப்பகுதிவாழ் மக்களின் பாரம்பரிய வாழ்வியல் அம்சங்கள் இவ்வாய்வின் மூலம் ஆவணப்படுத்தப்படுத்தப்படுவதன் ஊடாக அவை எதிர்கால சந்ததிகளுக்கு உதவியாக இவ்வாய்வு அமையும் என நம்புகிறேன்.

**-ஆய்வாளர்-**

# பொருடளக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | iii |
| **அத்தியாயம் : 01** ஆய்வு அறிமுகம். | 1 - 12 |
| **அத்தியாயம் : 02** வாழ்வியல் சமூகப் பண்பாட்டு மரபுகள் | 13– 51 |
| **அத்தியாயம் : 03** வாழ்வியல் சடங்குகளும் ஐதிகங்களும் | 52- 71 |
| **அத்தியாயம் : 04** பொருளாதாரமும் போக்குவரத்தும் | 72 - 92 |
| **அத்தியாயம் : 05** தொகுப்புரை | 93 - 97 |
| உசாத்துணைகள் | 98 - 100 |
| பின்னிணைப்பு | |